## III. மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1968ம் ஆண்டுக்குரிய மத்திய வங்கியின் நிதிக் கணக்குகள், பின்னிணைப்பு IIல் உள்ள 6ம் அட்டவணையிற் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை 1967ம் ஆண்டிற்குரியனவற்றுடன் ஒப்பிடுகையில் ஏற்படும் முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு :—

| | மாற்றம் | |
|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் |
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் .. .. | +273.2 | + 14.8 |
| சுற்றோட்டத்தில் உள்ள நாணயங்கள் .. .. | + 9.1 | + 0.8 |
| கேள்வி வைப்புக்கள் .. .. .. .. | +192.7 | + 27.0 |
| (இவற்றில் வர்த்தக வங்கிகள்) .. .. | — 4.4 | — 3.0 |
| சர்வதேச ஒதுக்கு நிதி .. .. .. | — 24.9 | — 9.6 |
| உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் .. .. | +294.2 | + 16.8 |
| (இவற்றில் அரசாங்க, அரச உத்தரவாதம்பெற்ற கடனுவணங்கள்) .. .. | +269.4 | + 19.6 |

\+ ஏற்றம் — தாழ்வு

மத்திய வங்கியின் நாணய மாற்றுவீதங்களில் எதுவித மாற்றமும் இவ்வாண்டில் நடைபெறவில்லை. நடைமுறையிலுள்ள ஸ்டேர்லிங், இந்திய ரூபாய்கள், ஐக்கிய அமெரிக்க டொலர்களின் மாற்றுவீதங்கள் பின்வருமாறு :—

| | | தந்திமாற்று கொள்வனவு | தந்திமாற்று விற்பனை |
|---|---|---|---|
| ஸ்டேர்லிங் | உடன்மாற்று | 1சி. 4 53/64 பெ. | 1சி. 4 13/16 பெ. |
| (இலங்கையின் ரூபா ஒன்றிற்கு) | பின்மாற்று (ஆறு மாத காலவரை) | உடன்மாற்றிலிருந்து 1/128 பெ. மாதாந்தக் கழிவு | உடன்மாற்றிலிருந்து 1/128 பெ. மாதாந்த ஏற்றம் |
| இந்திய ரூபாய்கள் (100க்கு) | உடன்மாற்று | ரூ. 79 1/8 | ரூ. 79 3/16 |
| | பின்மாற்று (ஆறு மாத காலவரை) | உடன்மாற்றிலிருந்து ரூ. 1/32 மாதாந்தக் கழிவு | உடன்மாற்றிலிருந்து ரூ. 1/32 மாதாந்த ஏற்றம் |
| ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (100க்கு) | உடன்மாற்று | ரூ. 592.25 | ரூ. 592.50 |
| | பின்மாற்று (மூன்று மாத காலவரை) | ரூ. 592.25 | உடன்மாற்றிலிருந்து -/25 சதம் மாதாந்த ஏற்றம் |

மத்திய வங்கியின் அந்நிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் பின்னிணைப்பு IIஇல் உள்ள 11ஆம் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

1968ம் ஆண்டு மே மாதம் 6ம் நாள் தொடக்கம், அரசாங்கக் கடன் ஆவணங்களையும், வர்த்தகம், உற்பத்தித்துறைகளால் வழங்கிய கடன் வாக்குறுதிப் பத்திரங்களையும் ஆதாரமாகக் கொண்டு அளிக்கப்பட்ட மத்திய வங்கியின் முற்பணத்திற்கு வட்டி வீதம் 5% விருந்து 5½%இற்கு உயர்த்தப் பட்டது. உத்தாவாத விலைத்திட்டத்தின்கீழான நெற் கொள்வனவிற்கும், விவசாயப் பண்டங்களின் கொள்வனவு விற்பனவுக் களஞ்சியப்படுத்துதற்கும் நிதியீட்டுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் சம்பந்தமான கடன் வாக்குறுதிப் பத்திரங்களுக்கெதிராக வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி வழங்கிய முற்பணத்தின் வட்டி வீதம் மாற்றமின்றி 3 வீதத்திலேயே இருந்தது. நெல், வெங்காயம், பம்பாய் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, அன்ஞசி, காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தித் தொடர்பாக, கூட்டுறவுச் சங்கங்களின் கடனுறுதி வாக்குப் பத்திரங்களை ஈடாக வைத்து வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிலிருந்து பெற்ற முற்பணத்திற்கு வட்டி 1½ சதவீதமாக அமைக்கப்பட்டது. ஆனல் இவ்வசதியைப் பயன்படுத்திக்கொள்ளும் வர்த்தக வங்கிகள் முதலாக வாக்குறுதிப் பத்திரம் வரைவோரிடத்தில் 8 சதவீத வட்டிக்கு மேற்படாது (குறித்த திகதிகளில் பணத்தைத் திரும்பக் கொடுக்குங்கால் 3 சதவீதம் கழிவுக்கு உட்பட்டு) இருத்தல் வேண்டும். திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் கழிவு வீதம் கடைசியாக ஏற்கப்பட்ட சராசரிக் கேள்வி வீதத்திலிருந்து 1/8 வீதமாகத் தொடர்ந்து நிலவியது.

### அந்நிய நாணயத் தாள்கள்

1968ம் ஆண்டு ஓகத்து மாதத்திலிருந்து மத்திய வங்கி இவ்வூரில் தொழிலாற்றும் வர்த்தக வங்கிகளிடத்திலிருந்து குறிக்கப்பட்ட அந்நிய நாணயத் தாள்களைக் குறிக்கப்பட்ட விலையில் வாங்கிக்கொள்ள வழிவகைகள் செய்துள்ளது.

### கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

இந்த உத்தரவாதத் திட்டத்தின்கீழ் நெல், வெங்காயம், பம்பாய் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, அன்ஞசி, காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்திக்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வர்த்தக வங்கிகளினல் வழங்கப்படும் கடன்களில், செலுத்தத்தவறிய தொகையில் 75 சதவீதத்தை அரசாங்கத்திற்காக மத்திய வங்கி ஈடுசெய்ய உத்தரவாதம் அளித்து வருகிறது. உத்தரவாதக் கட்டணமாக வர்த்தக வங்கிகளால் ½ சதவீதம் இறுக்கப்படவேண்டும். 1968ம் ஆண்டு திசெம்பர் 31ந் திகதிவரை மத்திய வங்கி ரூபா 7,56,33,000க்கு வர்த்தக வங்கிகளுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது.

### நடுத்தரக்கால, நீண்டகாலக் கொடுகடன்

இந்தாண்டில், கொடுகடன் நிலையங்கள் மத்திய வங்கியினது நடுத்தரக்கால நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின்கீழ் உள்ள மீளநிதியீட்டல் வசதிகளை அதிகமாகப் பயன்படுத்தின. இவ்வாண்டில் ரூபாய் 5,228,000 கொண்ட மீளநிதியீட்டற் கடன்கள், கொடுகடன் நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. மத்திய வங்கியால் அளிக்கப்பட்ட மீளநிதியீட்டற் கடன்களுக்கு 1968ம் ஆண்டு நவெம்பர் முதலாந் திகதியிலிருந்து வட்டிவீதங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டன:

(அ) விவசாயமல்லாத தொழிற்றுறைக்கு அபிவிருத்திக்கு அல்லது வளர்ச்சிக்கு—ஆண்டிற்கு 4 சதவீதம்

(ஆ) தேயிலைக் கட்டுப்பாட்டாளர் வட்டித் தொகையில் ஒரு பகுதியைக் கொடுக்குங்கால், தேயிலைத் தொழிற்சாலையைப் புதுப்பிக்கவும் அல்லது புதிய தொழிற்சாலையை அமைக்கவும்.

(1) உள்ளூர் செலவின் மீளநிதியீட்டற் கடன்களுக்கு ஆண்டுக்கு 5 சதவீதம்.

(2) அந்நிய செலாவணிச் செலவின் மீளநிதியீட்டற் கடன்களுக்கு ஆண்டுக்கு 7 சதவீதம்.

(இ) வாணிபம், வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் அபிவிருத்திக்கோ அல்லது வளர்ச்சிக்கோ—ஆண்டிற்கு 5½ சதவீதம்.

## நாணய வெளியீடு

1968ம் ஆண்டு முடிவில் நாட்டிற் சுற்றேட்டத்திலிருந்த நாணயத்தின் தொகை ரூபா 11,819 இலட்சமாகும். இது 1967ம் ஆண்டு முடிவிலுள்ள தொகையிலும்பார்க்க ரூபா 1,091 இலட்சம் கொண்டவதிகரிப்பாகும். இதில் நாணயத் தாள்கள் 1,046 இலட்சத்தாலும், நாணயக் குத்திகள் ரூபா 45 இலட்சத்தாலும் அதிகரித்தன.

இவ்வாண்டு ஒற்றேபர் மாதம், விசேட உணவு விவசாய நிறுவன குத்தி நாணய வெளியீட்டை முன்னிட்டு ஒரு புதிய செம்பும் நிக்கலும் சேர்ந்த கலவையாலாக்கப்பட்ட 2 ரூபா குத்தி நாணயம் வெளியிடப்பட்டது. இது 1.240 அங்குலக் குறுக்களவுகொண்டதும், 190 கிறேன்ஸ் பாரமுள்ளது மாகும். இது, முற்பக்கத்தில் மன்னன் மகா பராக்கிரமபாகுவினுடைய தென மரபுவழி கொள்ளப்படும் பொலநறுவையிலிருக்கும் சிலையின் உருவப்படியையும், அதற்கு இருமருங்கிலும் நெற்கதிர்க் கட்டுக்களையும் அடியில் ஒரு நெற்கூடையையும் கொண்டுள்ளது. வட்டப்பரப்பின் சுற்றுக் கோட்டிற்குச் சமீபமாக ‘‘ அதிக உணவு பயிரிடுக ’’ என்னும் வாக்கியம் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. இதன் பிற் பக்கத்து நடுவில் பெரிய எழுத்தில் 2 பொறிக்கப்பட்டுள்ளது. அதன் குறுக்கே ரூபா இரண்டின் பெறுமதி சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் வரையப்பட்டுள்ளது. இந்த எண் 2க்குமேலே ‘‘ ஸ்ரீ லங்கா ’’ எனச் சிங்களத்தில் இருப்பதுடன், இடம், வலம், இருமருங்கிலும் முறையே இதன் தமிழ், ஆங்கிலக் கூற்றுக்களைக் காணலாம். இலக்கம் 2க்குக்கீழே வெளியிடப்பட்ட ஆண்டான 1968 பொறிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குத்தி நாணயம் இதே பெறுமதியுள்ள தாள் நாணயத்துடன் சுற்றேட்டத்தில் தற்போது உளது.

## அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம்

1968ம் ஆண்டின் 28ம் இலக்க அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்ச் சட்டத்தின்படி, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியானது அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தை நடாத்தி வருகின்றது.

வருமானமும் செலவும்

மத்திய வங்கியின் இவ்வாண்டு வருமானம் ரூ. 33,450,000 ஆகும். ஒதுக்குகளிற் சேர்க்கப்பட்டவையும், வங்கிக் கட்டடத்தின் பெறுமானத் தேய்வுக்காகக் கழிக்கப்பட்டதும் உட்பட்ட செலவு ரூபா 32,458,000 ஆகும். தேறிய இலாபமான ரூபா 10,00,000 நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 39 (ஆ) பிரிவின்படி மிகைக் கணக்கிற்குச் சேர்க்கப்பட்டது.

வங்கி மேற்பார்வை

நாணயச் சட்டப்பிரிவு 29(1)ற்கு அமைய ஏழு வர்த்தக வங்கிகளை, 1968ல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பரிசோதித்தது. அத்துடன் 1961ம் ஆண்டின் 65ம் இலக்க நிதிச் சட்டப் பகுதி IIIன் இயக்கத்திற்குத் தொடர்புடைய பணிகளை இத் திணைக்களம் தொடர்ந்து ஆற்றியது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினல் மத்திய வங்கிக்குக் கொடுக்கப்பட்ட கொடுகடன் தொடர்பான தேயிலைத் தொழிற்சாலை புதியமுறை ஆக்கத் திட்டங்களை மதிப்பிடும் பணியில் அபிவிருத்தி நிதிப்பிரிவு ஈடுபட்டிருந்தது.